1975 அக்டோபர் 23]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இதற்குத் தனித்தனியாக செலவுக் கணக்குப் போட்டு, இன்னும் அதற்கான குறிப்புகள் என்னிடத்தில் வரவில்லை. தற்போது 20 நிழற் குடைகளை நாம் செப்பனிட்டு இருக்கிறோம். நிழற்குடைகளுக்கு முன்னாலே உள்ள பகுதிகளை விளம்பரத்திற்கு விடலாமா என்பதை பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, நகரத்தில் பல ஷெல்டர்கள் பல கம்பெனிகளால், பல ஸ்தாபனங்களால் விளம்பரத்திற்காகக் கட்டி இருக்கிறார்கள். கார்ப்பரேஷன் போட்ட ஷெல்டர்களை மாத்திரம் எடுத்துக் கொள்கிறீர்களா அல்லது எல்லா நிழற் குடைகளையும் எடுத்துக்கொள்ளப் போகிறீர் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 322 நிழற்குடைகளை சென்னை மாநகராட்சியிடமிருந்து எடுத்துக்கொண்டு இருக்கிறோம். மற்றவற்றை எடுக்கவில்லை.

Hostels for working women.

* 21 *Q.*—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether any financial assistance from Central Government had been secured during the calendar year 1973 for (i) expansion and (ii) construction of Working Women's Hostels in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ) ஆம்.

(இ) பணிபுரியும் மகளிர் தங்குவதற்கான விடுதிக் கட்டிடம் ஒன்று கட்டுவதற்காக சென்னை (மத்திய) கில்டு ஆஃப் சர்வீஸ் சங்கத்திற்கு இந்திய அரசு 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ரூ. 1,23,900 மானியமாக அளிக்க அனுமதி வழங்கி இருக்கிறது.

THIRU B. VENKATASWAMY: Many women working in some Government offices are suffering a lot. May I know whether there is any proposal to construct "Working Women's Hostels" nearer to their working institutions?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, கனம் உறுப்பினர் சொல்கிற யோசனை ஏற்கக் கூடிய யோசனைதான் என்றாலும், இப்போது அரசுத் துறையின் மேற்பார்வையில் சென்னையில் மட்டுமே நடைபெறுகிறது. அது மட்டுமல்லாமல், தமிழகத்தில் பொதுவாக சென்னையில், சென்னை சேவா சதனம், இந்திய மகளிர் சங்கம், கிருஸ்துவ மகளிர் சங்கம், மதுரை கில்ட் ஆப் சர்வீஸ், காஞ்சிபுரம் இந்திய மகளிர் சங்கம், சேலம், கோயம்புத்தூர் சேவா நிலையம் என்றும் தனியார் நடத்துவதற்கு இந்திய அரசாங்கத்தின் உதவி பெற்று இப்போது நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இதுபோன்ற தனியார் துறையினர் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு மாநில அரசு இந்திய அரசுக்குப் பரிந்துரை செய்து புதிய நிலையங்களை ஏற்படுத்தலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Schools for Blind.

*** 22 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Social Welfare be pleased to state the number of schools for the blind getting assistance from the Government in Kanyakumari district ?**

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: இல்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரணியபுரம் என்ற இடத்தில் ஒரு குருடர் பள்ளி இருக்கிறது. அதற்குக் கட்டிடம் இருக்கிறது, போதுமான மாணவர்கள் இருக்கிறார்கள், போதுமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அப்படியிருந்தும், அந்தப் பள்ளிக்கு இதுவரையிலும் அங்கீகாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, அந்தக் குருடர் பள்ளிக்கு அங்கீகாரம் கொடுத்து, அதற்கு அரசு போதுமான கிரான்ட் முதலியவற்றைக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாள் பரிசாக இப்போது நாட்டிலுள்ள கண்ணற்றோர், விழியற்றோர்களுக்கு என்று நான்கு புதிய பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அப்படி திறக்கப்பட்டிருக்கிற பள்ளிகளில் ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோயிலில் செயல்பட்டு வருகின்றது. உறுப்பினர் கூறியபடி, அரசு உதவி கோரி தனியார் துறை விண்ணப்பித்தால் அதுபற்றியும் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.